HGH INDIA® 2022

HOME DECOR ▪▪▪ GIFTS ▪▪▪ HOUSEWARE

**December 13-16, 2022**
Bombay Exhibition Center, Mumbai

# NEWS 3

A TEXZONE Event
www.hghindia.com

Where business feels at home!

# *HGH* இந்தியா
# 2023 கோடை / வசந்த காலத்தை வரவேற்போம்

HGH இந்தியா, 12வது பதிப்பாக, ஹோம் ப்ராடக்ட் துறைக்கான பல புதிய தொழில் வாய்ப்புகளுடன், டிசம்பர் 13 அன்று மும்பையில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இது, ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஹோம் டெக்கர், ஹோம் ஃபர்னிச்சர், ஹவுஸ்வேர் மற்றும் கிஃப்ட்களுக்கான, இந்தியாவின் முன்னணி B2B டிரேட்ஷோவான ஏஎஏ இந்தியாவின் முதல் ஸ்ப்ரிங்/சம்மர் எடிஷனும் ஆகும், இது ஹோம் ப்ராடக்ட் துறையால் வலுவாக ஆதரிக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கோவிட் மருத்துவமனையாகச் செயல்பட்ட, கோரேகானில் உள்ள பாம்பே இண்டர்நேஷனல் எக்ஸிபிஷன் சென்டருக்கு திரும்பி வந்துள்ள ஏஎஏ இந்தியா ஸ்ப்ரிங்/சம்மர் எடிஷன், மிகவும் வெற்றிகரமான தீபாவளி டீடெயில் சீசன் மீது மேலும் கட்டமைப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது. ஸ்ப்ரிங்/சம்மர் 2023 நுகர்வோர் தேவைக்காக தங்களின் ஸ்டாக்குகளை மீண்டும் நிரப்ப வேண்டியுள்ள தங்களின் தேவை குறித்து ரீடெய்லர்கள் மற்றும் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் தெரிவித்துள்ளனர். கூடுதலாக அவர்கள் தங்களின் பலவகைப்பட்ட ப்ராடக்ட்களை மேலும் அதிகரிக்கவும், நவீன காலத்து நுகர்வோரின் தேவைக்கேற்ப இருக்கவும் அவர்களுக்கு புதிய யோசனைகள், ப்ராடக்ட்கள் மற்றும் சேவைகள் தேவைப்படுகிறது. ‘‘தீபாவளி சீசனையும் தாண்டி நம் ஹோம் ப்ராடக்ட் துறைகளில் தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக



HGH இந்தியா ஸ்ப்ரிங்/சம்மர் எடிஷனை நாங்கள் உருவாக்கியுள்ளோம். ப்ராடக்ட் மற்றும் டிசைனில் புதுமை என்பது பிரபலமாகி, போட்டியைத் தீவிரமாக்குவதால், அதிகமான ரீடெய்லர்களும் டிஸ்ட்ரிப்யூட்டர்களும் ஆண்டுதோறும் சோர்சிங் செய்வதற்கு பதிலாக அரையாண்டு சுழற்சி முறையில் சோர்சிங் செய்கின்றனர்.

ஹோம் டெக்ஸ்டைல், ஹோம் டெக்கர், ஹவுஸ்வேர் மற்றும் கிஃப்ட்ஸ் மீது அதிகரித்து வரும் தேவைக்கு இணங்க, டிஸ்ட்ரிப்யூட்டர்கள் மற்றும் ரீடெய்லர்களுக்கு தங்களின் மதிப்பு சங்கிலியை வேகப்படுத்தி, நுகர்வோரிடமிருந்து பயன் பெற ஒரு கூடுதல் வாய்ப்பு தேவை.’’ என்று ஏஎஏ இந்தியாவின் நிர்வாக இயக்குநரான திரு. அருண் ரூங்கட் கூறுகிறார்.வளர்ந்து வரும் இந்த டிரேட்ஷோவானது இத்தாலியன் டிரேட் ஏஜென்ஸியின் வர்த்தக ஆணையரும் இயக்குனருமான டாக்டர். அலெஸாண்ட்ரோ லிபரேடரி என்பவரால் தலைமை தாங்கப்பட்டு பாரம்பரியமான விளக்கேற்றும் விழாவுடன் தொடங்கியது, இதில் கௌரவ விருந்தினராக மகாராஷ்டிரா பாஜக பேச்சாளரான திரு. அதுல் ஷா, HGH இந்தியாவின் இயக்குனர்களான திரு. அருண் ரூங்டா மற்றும் டாக்டர். கீர்ட் போட்கர் உள்ளிட்டோரும், அவர்களுடன் பல தொழில்துறை தலைவர்களும், அரசு அதிகாரிகளும், பிரமுகர்களும் கலந்துகொண்டனர். ஒன்றாக இணைந்து விளக்கேற்றிய பிறகு, பையர்ஸ் மற்றும் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் முதல் தரமாக வடிவமைக்கப்பட்ட ஸ்டாண்ட்களை மீண்டும் செயல்படுத்தும் எக்ஸிபிட்டர்களுக்கு டாக்டர். போட்கர் நன்றி தெரிவித்தார். எங்களின் எக்ஸிபிட்டர்கள் ஒரு அற்புதமான ஷோவை நடத்தி, நம் ஹோம் ப்ராடக்ட் துறைகளின் டிசைன் திறன்களைக் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள்.

அதை உறுதிப்படுத்தும் வகையில், ‘டிசைன், தரம் மற்றும் அமைப்பு முறையின் அடிப்படையில் HGH இந்தியாவின் தோற்றம் மற்றும் கலாச்சாரம் சர்வதேச தரத்திற்கு இணையானதாக உள்ளது’’ என்று கௌரவ விருந்தினர் திரு. அதுல் ஷா கூறினார். மேம்பட்ட இத்தாலியன் ஹோம் ப்ராடக்ட் இண்டஸ்ட்ரி HGH இந்தியாவுடன் ஒரு நீண்ட கால பார்ட்னர்ஷிப்பை விரும்புகிறது என்று தலைமை விருந்தினரான டாக்டர். அலெஸாண்ட்ரோ லிபரேடரி சுட்டிக்காட்டியுள்ளார், ஏனெனில், இத்தாலிய நிறுவனங்களுக்கான போதுமான சுற்றுச்சூழலை HGH வழங்கி, சிக்கலான மற்றும் பெரிய இந்திய சந்தையில் முதல் படியை மிகவும் எளிதாக்குகிறது. மேலும் அவர், ‘இத்தாலிய மற்றும் இந்திய ஹோம் ப்ராடக்ட் இண்டஸ்ட்ரிகளிடையே கூட்டு முயற்சியை விரிவுபடுத்துவதே இத்தாலியன் டிரேட் ஏஜென்ஸியின் இலக்கு’ என்று கூறினார்.

இந்த HGH இந்தியாவின் டிசம்பர் 2022 எடிஷனானது ஒரு பக்கம் 400 எக்ஸிபிட்டர்கள் மற்றும் பிராண்ட்கள் மற்றும் மறுபக்கம் 550-க்கும் மேற்பட்ட நகரங்களிலிருந்து பையர்கள் மற்றும் ஸ்பெசிஃபையர்கள் இடையில் சந்திப்புகளை சாத்தியமாக்கும்.



*சிறப்பு விருந்தினர் டாக்டர். அலெஸாண்ட்ரோ லிபரேடரி மற்றும் கௌரவ விருந்தினர் திரு. அதுல் ஷா மற்றும் பிற பிரமுகர்கள் கலந்துகொண்டு விளக்கேற்றி HGH இந்தியா கண்காட்சியின் கேட்டலாக் அறிமுகப்படுத்தினார்கள்*

# இந்தியாவில் இத்தாலிய ஹோம் ப்ராடக்ட்

HGH இந்தியா ஸ்ப்ரிங்/சம்மர் 2022-இல் இத்தாலியன் டிரேட் ஏஜென்ஸி (ITA) ஒரு ஒருங்கிணைந்த பூத்தை ஏற்பாடு செய்கிறது, அதில் 9 இத்தாலிய நிறுவனங்கள் தங்களின் ப்ராடக்ட்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்றன:

ஜானெட்டி முரானோ ஸ்ரீ கைகளால் ஆனா கண்ணாடி கலை சிற்பங்களைத் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றது. அவற்றில் பறவைகள், மீன், குதிரைகள் மற்றும் பிற விலங்குகளின் சிற்பங்களும், அப்ஸ்ட்ராக்ட்ஸ் மற்றும் கடவுள் கனேசனின் சிற்பமும் கூட அடங்கும். ஒவ்வொரு கலைப்பொருளிலும் கலைஞரின் கையொப்பமும், ப்ராடக்ட் உண்மையான முரானோ கிளாஸ் என்று அதிகாரப்பூர்வ இத்தாலிய அரசால் உத்தரவாதம் அளிக்கப்படும் வகையில் பிராந்திய வர்த்தக குறியீடான “Vetro Artistico di Murano” என்பதும் பொறிக்கப்பட்டிருக்கும்.

லி & ப்ரா இன்னோவேஷன் அண்ட் டிசைன் புதுமையான வினைல் ஃப்ளோரிங்கையும், டிஜிட்டல் முறையில் ப்ரின்ட் செய்யப்பட்ட வால்கவரிங்ஸையும் வழங்குகிறது, அவற்றை ஈரமான பகுதிகளான

பாத், ஷவர் மற்றும் கிட்செனிலும் பயன்படுத்தலாம். ஹாஸ்பிடாலிட்டி மற்றும் நிறுவனங்களில் ஒப்பந்த திட்டங்களுக்காக தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளையும் லி & ப்ரா உற்பத்தி செய்கிறது. சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஆர்கிடெக்ட்ஸுடன் இணைந்ததால், தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் ஸ்டைல் சார்ந்த கண்ணோட்டத்திலிருந்து பல புதுமையான தீர்வுகளுக்கு வழிவகுத்தது. இத்தாலி மற்றும் சுவிட்சர்லாந்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

ப்ரூனல் ப்ரெசியோசி டி' அடோர் பிரத்தியேகமான கிஃப்ட்ஸ் மற்றும் லக்சூரி ஃபர்னிஷிங்களுக்காக வடிவமைக்கப்பட்ட கலைநயமிக்க வெள்ளி மற்றும் தங்க கலைப்பொருட்களை உருவாக்குகிறது. அவர்களின் கலெக்ஷன் அவர்களின் வொர்க்ஷாப்களில் முற்றிலும் கைகளால் செய்யப்பட்டவையாகும், மேலும் அவற்றில் சிற்பங்கள் முதல் டிரேக்கள், ஜாடிகள், கேண்டில்ஸ்டிக்ஸ், டீ/காபி செட்கள், ஃபர்னிஷிங் அக்சஸரிஸ் வரையிலான பல்வேறு பொருட்கள் அடங்கும். சில்வர்ஸ்மித்தின் பண்டைய கலை போன்ற மெட்டீரியல், டிசைன் மற்றும் மாடலிங், ஒவ்வொரு ப்ரூனல் கலைப்பொருளையும் தனித்துவமான மாஸ்டர்பீஸாக்குகிறது.

செவென் சேடி ரீப்ரொடக்ஷன்ஸ் கைவினை பாரம்பரியத்துடன் புதிய தொழில்நுட்பங்களை சேர்த்து இந்தியாவில் பல ஸ்டைல்களில் சேர்களை காட்சிப்படுத்துகிறது. சேர் ஃப்ரேம் முதல் முழுமையான சேர் வரை ஃபினிஷிங் மற்றும் ஃபேப்ரிக்கில் பல்வேறு கலவைகளை வழங்குகிறது. வெட்டுவது முதல் மரக்கட்டையை பதப்படுத்துவது மற்றும் உலர்த்துவது வரை, அப்ஹோல்ஸ்டரிங் முதல் ஃபினிஷ் செய்யப்பட்ட சேர்களைப் பேக் செய்வது வரை அனைத்து செயல்முறைகளும் அவர்களின் சொந்த தொழிற்சாலையிலேயே செய்யப்படுகிறது, இது உயர்தரமான தயாரிப்புக்கு உதவுகிறது.

காசா கே. லைஃப்ஸ்டைலை உருவாக்குவதற்காக நேர்த்தியான மெட்டீரியல்களை இணைத்து, காலங்களையும் ஸ்டைல்களையும் ஒன்றிணைக்கிறது. பாரம்பரியமான ஃப்லோரென்டைன் தொழில்நுட்பங்கள், டீடெய்ல்ஸ் மீதான விருப்பம் மற்றும் அப்டேட் செய்யப்பட்ட ஃபினிஷஸ் ஒவ்வொரு படைப்பையும் தனித்துவமானதாக்குகிறது.

சிசேர் ஃபெராரி க்ரூப் ரெசிடென்ஷியல் மற்றும் கமர்ஷியல் இன்டீரியர் ப்ராஜெக்ட்களுக்கு ஃபர்னிச்சர், கதவுகள் மற்றும் அலங்கார பொருட்களை வழங்குகிறது.

ஆர்க்கிடெக்ட் மற்றும் டிசைனர்களுக்கு தொழில்முறை சேவைகளை CFG வழங்குகிறது, இது உண்மையான இத்தாலிய ஃபர்னிச்சர் தயாரிப்பாளர்களின் பாரம்பரியத்தை நவீன தொழில்நுட்பத்துடன் இணைக்கிறது. 3டி மற்றும் கம்போசிட் வெனீர்ஸ், கிளாஸ், மெட்டல்ஸ், எம்போஸ்டு லெதர்ஸ், கிரேடியன்ட் லாக்கரிங், மெட்டல் மெஷஸ் மற்றும் நேச்சுரல் ஸ்டோன்ஸ் உட்பட பல்வேறு மெட்டீரியல்களுடன் CFG வேலை செய்கிறது.

க்ராஸி பியெட்ரெ எத்தகைய மார்பில் மற்றும் கல்லுக்கும் ஏற்றதாக இருக்கும், குறிப்பாக வெவ்வேறு மெட்டீரியல்களைப் பயன்படுத்தும் சிக்கலான ப்ராஜெக்ட்களுக்கு இது ஏற்றது.

LYM என்பது முற்றிலுமாக இத்தாலியில் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் மற்றும் டிசைன் சார்ந்த லைட்டிங்கில் சிறந்து விளங்கும் ஒரு புதிய நிறுவனமாகும்.

ஸ்டேடஸ், சர்வதேச அளவில் வெற்றிகரமான தனித்துவமான ஃபர்னிச்சர் ஸ்டைலை வழங்குகிறது.













*சிறப்பு விருந்தினர் டாக்டர். அலெஸாண்ட்ரோ லிபரேடரி மற்றும் கௌரவ விருந்தினர் திரு. அதுல் ஷா HGH இந்தியாவின் பல பூத்களை விரிவாக சுற்றி பார்த்தார்கள்.*

# HGH இந்தியாவில் வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப்

நாம் இரவு நேரத்தில் நன்கு ஓய்வெடுப்பதற்கு நல்ல தூக்கம் அவசியமாகும். இந்த எண்ணம் ஆரோக்கியமான தூக்கத்தை ஒரு லைஃப்ஸ்டைல் டிரெண்ட்டாக்கியுள்ளது. எனினும், இந்த டிரெண்ட்டிற்கு பெட்ஸ், மெட்ரெசெஸ் மற்றும் ஹோம் டெக்ஸ்டைல்ஸின் ரீடெயில், டிஸ்ட்ரிப்யூஷன் மற்றும் உற்பத்தியாளர்களின் ஆதரவு தேவை, ஏனெனில், ஆரோக்கியமான தூக்கத்தில் ஸ்லீப் ப்ராடக்ட்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பல செயல்பாட்டு தேவைகள் அடங்கும். அத்தகைய ப்ராடக்ட்கள் ஃபேஷன் சார்ந்தவை அல்ல, அவற்றுக்கு நுகர்வோரின் பக்கத்திலிருந்தும் தகவல்கள் மற்றும் கல்வி தேவை.

ஆரோக்கியம் என்று வரும்போது உணவு பழக்கம் மற்றும் உடற்பயிற்சிகளை விட தூக்கம் சிறந்தது என்று உங்களுக்கு தெரியுமா? ஃபிலிப்ஸ்-KJT குழுமத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு வருடாந்திர சர்வேயின் முடிவு அவ்வாறு கூறுகிறது. எங்கு எப்படி தூங்குவதென்று பலர் கவலைப்படுவதில்லை என்ற போதிலும், தரத்தின் அடிப்படையிலும், உடல் சார்ந்த தேவைகள் மற்றும் தனிப்பட்ட விருப்பங்களுக்கு தனிப்பயன்பாட்டுக்கானதாக்கும் வகையிலும் மேட்ரெஸஸ் மற்றும் பிற ஸ்லீப் ப்ராடக்ட்களின் தொழில்நுட்பங்கள் வேகமாக முன்னேறுகிறது.

இந்தியன் ஸ்லீப் ப்ராடக்ட் ஃபெடரேஷன் (ISPF) HGH இந்தியாவுடன் இணைந்து வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பெவிலியனை நடத்துகிறது, இங்கு புதிய தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன மற்றும் தனிப்பட்ட தேவைகளின் அடிப்படைகளை நன்கு புரிந்துகொள்வதற்காக ரீடெய்லர்களுக்கு தகவல்கள் வழங்கப்படுகின்றன. ஒரு ப்ராடக்டை விற்பனை செய்வதற்கு முன் தூக்கத்தை விற்பனை செய்ய வேண்டும் என்பதே இதன் குறிக்கோள் ஆகும். ப்ராடக்ட்களின் நன்மைகளை நீங்கள் எடுத்துக்காட்டுவதற்கு முன் வாடிக்கையாளர்களின் தூக்க பிரச்சனைகளை முதலில் புரிந்துகொள்வது அவசியமாகும். ஷோவின்போது வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பெவிலியனில் வழங்கப்படும் விரிவுரைகள் அதை மேம்படுத்தி, தங்களின் வாடிக்கையாளர்களிடம் வழக்கமான பிரச்சனைகள் மற்றும் போதுமான தீர்வுகள் குறித்து தெரிவிப்பதன் மூலம் ஒரு ஆரோக்கியமான தூக்கத்தை விற்பனை செய்ய ரீடெய்லர்களுக்கு உதவுகிறது.




வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பெவிலியன் ஒரு பகுதியின் மையத்தில் இருக்கிறது, அங்கு ஸ்லீப்வெல், கர்ல்-ஆன், சென்சுரி ஃபைபர், ஃபேமஸ் ஃபோம், ஸ்ப்ரிங் ஃபிட், ஸ்லீப்ஃப்ரெஷ், RDP ஃபோம், ரெபோஸ் மேட்ரெஸ் மற்றும் பிற மேட்ரெஸ் நிறுவனங்கள் தங்களின் ப்ராடக்ட்களைக் காட்சிப்படுத்துகின்றன. நாம் நம் வாழ்க்கையில் மூன்றில் ஒரு பகுதியை மேட்ரஸ்களில் தான் செலவிடுகிறோம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு இந்த நிறுவனங்கள் தங்களின் தீர்வுகளைப் பயன்படுத்தி சரியான மேட்ரஸுக்கான தேடலை ஆதரிக்கின்றன.

Smart Kitchen

an initiative by HGH India

HGH இந்தியாவில் கிட்சென் ப்ராடக்ட்களின் விற்பனை வேகமெடுக்கிறது. வண்டர்செஃப் அல்லது சஞ்சிவ் கபூர் போன்ற முன்னணி நிறுவனங்கள், டிசைன், மேம்படுத்தப்பட்ட செயல்பாடுகள் மற்றும் சமையல் செய்வதிலும், கிட்சென் மேலாண்மையிலும் அதிகமான சௌகரியத்தின் அடிப்படையில் தங்களின் கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்துகின்றன. இந்திய கிட்சென்கள் நவீன தொழில்நுட்பத்தையும் சௌகரியத்தையும் பெற்று வருகின்றன. ஸ்மார்ட் கிட்சென்ஸ் என்பது இந்தியாவில் உள்ள பல வீடுகளில் நிஜமாகி வருகின்றன. குக்வேர் மற்றும் கிட்சென்வேர் உற்பத்தியாளர்கள் டிரெண்ட்டை ஏற்றுக்கொண்டு ஸ்மார்ட்டான தீர்வுகளை அறிமுகப்படுத்துகின்றார்கள்.

உணவு சேமிப்பு, தயாரிப்பு, பதப்படுத்தல், பரிமாறுதல் மற்றும் பாத்திரம் கழுவுதலின் அனைத்து கட்டங்களிலும் சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதே புதிய தேவைகளாகும், இவை தான் புதுமைகளை இயக்குகின்றன.

உதாரணத்திற்கு, ஹால் 3-இல் உள்ள ஹெல்த் சேஃப் கோட்டிங்குடன் கூடிய குக்வேர் போன்ற பல புதிய தீர்வுகளை பையர்கள் பார்த்து மதிப்பாய்வு செய்யலாம்.




Kids' Home

an initiative by HGH India

இந்தியாவில் கிட்ஸ்' ஹோம் ப்ராடக்ட் மார்க்கெட் வளர்ந்து வருவதாலும், பெற்றோர்கள் சிறந்த தரத்தையும் அதிகமான பிராண்ட்களையும் தேடுவதாலும், இந்த மார்க்கெட் செக்டார் புதிய வாய்ப்புகளுக்கு கதவை திறக்கிறது. புதுமையான, நன்கு வடிவமைக்கப்பட்ட, நல்ல தரமான ப்ராடக்ட்களுக்கான தேவை ஆண்டுக்கு தோராயமாக15 சதவிகிதம் என்ற என்ற அளவில் அதிகரிக்கிறது. HGH இந்தியா அதன் டிசம்பர் எடிஷனில் ஒரு சிறப்பு பிரிவை வழங்குகிறது, அது பேபி ப்ளாங்கெட்ஸ், பேபி பெட்டிங், கிட்ஸ்' மேட்ரெஸஸ், வாக்கெர்ஸ், கட்லெரி, டேபிள்வேர், கிட்ஸ்' ஸ்டோரேஜ், எஜுகேஷனல் டாய்ஸ் மற்றும் பலவற்றைப் போன்ற பலதரப்பட்ட ப்ராடக்ட்களைக் காட்சிப்படுத்தும்.

பின்னப்பட்ட சாஃப்ட் டாய்கள், பேபி மற்றும் கிட்ஸ்' பெட்டிங்ஸ், பேபி டவல்ஸ்,




அக்சஸரிஸ், கம்ஃபர்டர்ஸ், கிஃப்ட் செட்ஸ் முதலியன போன்ற படைப்பாற்றல் மிக்க ப்ராடக்ட்களை ப்லுச்சி வழங்குகிறது. அவை தங்களின் டிஸ்னி/மார்வெல்/ஸ்டார்வார்ஸ் உரிமம் பெற்ற பேபீஸ் & கிட்ஸ்' ப்ராடக்ட்களையும் காட்சிப்படுத்தும். கிட்ஸ் பெட் லினென், ஷேப்டு குஷன்ஸ், ஷவர் கர்டன்ஸ், பில்லோஸ், குவில்ஸ் உள்ளிட்டவையும் ஹேப்பி ஹோம் லினென்ஸால் காட்சிப்படுத்தப்படும். சென்சுரி மேட்ரெஸஸ் ஒரு பிரத்தியேகமான கிட்ஸ் மேட்ரெஸஸ் கலெக்ஷனைக் கொண்டுவரும். பான்ஹெயர் மற்றும் டாக்டர் டவல்ஸ் அவர்களின் கிட்ஸ் டவல்ஸை அறிமுகப்படுத்துவார்கள். இந்தியாவில் சிறந்த டவல் உற்பத்தியாளர்களில் ஒன்றான சாரதா டெர்ரி, தங்களின் பிராண்டான மைக்ரோ காட்டனின் கீழ் குழந்தைகளுக்கான பெட் ஷீட்கள் மற்றும் டவல்களை அறிமுகம் செய்வார்கள். கைகளால் செய்யப்படும் மர பொம்மைகள், கிட்ஸ் ஃபர்னிச்சர் மற்றும் மற்ற கிட்ஸ் & பேபி ப்ராடக்ட்களின் உற்பத்தியாளர்கள் குழுவாக பங்கேற்க EPCH ஏற்பாடு செய்துள்ளது. மற்ற வழக்கமான எக்ஸிபிட்டர்கள் பலரும் சிறப்பான கிட்ஸ் ப்ராடக்ட்களைக் காட்சிப்படுத்துவார்கள்.



**ஹுசைன் அய்டின்,**
துருக்கியின் தூதரக அதிகாரி

HGH இந்தியாவுக்கு நான் வருகை தருவது இது இரண்டாவது அல்லது மூன்றாவது முறை, மேலும் ஒவ்வொரு ஆண்டும் இந்த கண்காட்சி எங்களின் எதிர்பார்ப்பை மிஞ்சுவதாக உள்ளது. இது சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் சர்வதேச தரத்திலும் உள்ளது, இது தங்களின் பிராண்ட்களை விளம்பரப்படுத்துவதற்கு அதிகமான வாய்ப்புகளை எக்ஸிபிட்டர்களுக்கு வழங்குகிறது. HGH இந்தியாவில் பங்கேற்கும்படி அதிகமான துருக்கி நாட்டு நிறுவனங்களை நான் ஊக்கப்படுத்துகிறேன், நாங்கள் அதை அதிகமாக பரிந்துரைக்கிறோம்.



**அபினவ் மஹாஜன்,**
MD, மஸ்பர்

HGH இந்தியா தொடங்கப்பட்ட நாளிலிருந்து மஸ்பர் லிவிங் அதனுடன் இருக்கிறது. வருடத்திற்கு 4 நாட்கள் எங்களை இங்கு கண்டிப்பாக பார்க்கலாம். இடம் தான் முக்கியமானது என்று நாங்கள் நம்புகின்றோம். கடந்த 22 ஆண்டுகளாக நாங்கள் இந்த தொழிலில் இருக்கிறோம். இந்த ஆண்டின் சிறப்பாக, ரீடெய்லர்களுக்காக ஒரு ஷாப்-இன்-ஷாப் கான்செப்ட்டை நாங்கள் அறிமுகம் செய்துள்ளோம். இதன் மூலம் வாடிக்கையாளர் ஒரு ப்ராடக்ட்டை வாங்குவதற்கு முன் அதை பயன்படுத்தி பார்க்க முடியும். கலர் டிரெண்டிங்கை டீகோட் செய்து கான்செப்சுவலைஸ் செய்வதற்காக முன்கூட்டியே 18 மாதங்கள் நாங்கள் வேலை செய்கிறோம்.



**பிரதிமா லடிவாலா,**
இணை நிறுவனர் மற்றும் இயக்குனர், ப்லுச்சி

நாங்கள், ஒரு பிராண்டாக, HGH இந்தியாவில் தான் முதல்முறையாக காட்சிப்படுத்த தொடங்கினோம். கடந்த 5 ஆண்டுகளாக HGH இந்தியாவில் நாங்கள் காட்சிப்படுத்திக்கொண்டிருக்கிறோம், மேலும் ஒவ்வொரு பங்கேற்பின்போதும், பூத் பெரியதாகவும் சிறப்பானதாகவும் மாறியுள்ளது. இது இந்தியா முழுவதும் உள்ள ரீடெய்லர்களைச் சந்திப்பதில் எப்போதும் பெருமகிழ்ச்சி அடைகிறது. 50% ரீடெய்லர்கள் எங்களிடம் மீண்டும் மீண்டும் வாங்குபவர்களாக இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் நேரடியாக சந்திப்பது மகிழ்ச்சியாக உள்ளது. ப்ராடக்ட்கள் குறித்த கருத்துகளைப் பெறவும், மேம்படுத்தவும் இது உதவுகிறது.



**அபூர்வா குமார்,**
Asst. VP
இந்தியா ப்ராடக்ட் சோர்சிங், வண்டர்செஃப்

நாங்கள் கடந்த 3 ஆண்டுகளாக HGH இந்தியாவில் பங்கேற்று வருகிறோம், மேலும் நாங்கள் எப்போதும் புதிதான ஒன்றை அனுபவித்தோம். உலகெங்கிலும் இருந்து பல பிராண்ட்களை நம்மால் இங்கு காண முடியும், அதனால் இது இந்தியாவின் மிகப்பெரிய டிரேட் ஷோக்களில் ஒன்றாக உள்ளது. ஒரு பிராண்டாக நாங்கள் யார் என்பதையும் எங்களின் நோக்கம் என்ன என்பதையும் தெரியப்படுத்துவதற்காக HGH எங்களின் உத்தியில் எப்போதும் இருந்தது. ஒரே மாதிரியான எண்ணங்களைக் கொண்டவர்கள் இந்த ஷோவில் ஒன்று கூடுவார்கள், மேலும் அதனால்தான் இங்கு குறிப்பிட்ட ஆட்கள் மட்டுமே இருக்கிறார்கள், அவர்கள் ஒருவருடன் ஒருவர் உண்மையாக பேசி ஒன்றாக தொழிலை வளர்க்க விரும்புகின்றனர். எங்கள் பூத்தின் அளவு மிகவும் சிறியதிலிருந்து பெரியதாக இப்போது மாறியுள்ளது.



**எஸ்.கே.மல்ஹோத்ரா,**
இயக்குனர், சேல்ஸ் மற்றும் மார்க்கெட்டிங், ஸ்ப்ரிங்ஃபிட்

நாங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக HGH இந்தியாவில் பங்கேற்று வருகிறோம். இது எங்களின் ப்ராடக்ட்டிற்கான சரியான பிளாட்ஃபார்ம், இங்குத்தான் நாங்கள் எங்களின் புதிய ப்ராடக்ட்களை அறிமுகம் செய்கிறோம். எங்களின் ப்ராடக்ட்டை வாங்குபவர்கள், இங்கு வந்து ப்ராடக்ட்டைப் பயன்படுத்தி பார்க்கலாம். நாங்கள் 50-60 சதுர அடியிலான சிறிய பூத்தில் ஆரம்பித்தோம், இப்போது அது 200 சதுர அடியாக வளர்ந்துள்ளது. கிரேட்டர் நொய்டா எடிஷனிலும் நாங்கள் பங்கேற்று 6 மாதங்கள் தான் ஆகிறது. அதற்கு இணையான வரவேற்பு கிடைப்பதைக் கண்டு நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

என்னுடைய கலையைக் காட்சிப்படுத்துவதற்காக HGH இந்தியா இந்த ப்ளாட்ஃபார்மை எனக்கு வழங்கியுள்ளது. இதில் நான் பங்கேற்பது இதுவே முதல்முறை, முடிந்தால் எதிர்காலத்தில் என் கலையைப் பிரபலப்படுத்தவும், பயிற்சி வழங்கவும் இத்தகைய பல ப்ளாட்ஃபார்ம்கள் எனக்கு தேவைப்படும். என் கலை நீண்ட காலம் வாழ வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**ராஜேந்திர அன்கம்,**
இந்தியா ஹெரிடேஜ் பெவிலியனில் உள்ள ஒரு கலைஞர்

# முதல் நாள் குறித்த கருத்துகள்














